தமிழ் முரசு சனிக்கிழமை 4 12 2004

முயன்றால் முடியாதது எதுவும் இல்லை

ஆர்வமும் உழைப்பும் இருந்தால் போதும், எந்தத் தொழிலானாலும் வெற்றிச் சிகரத்தை எட்ட முடியும் என்பதை நிரூபித்திருப்பவர் தொழிலதிபர் திரு ஆண்டன் ரவீந்திரன். ஐந்தாண்டுகளுக்கு முன்பு தகவல் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கும் ஜெனோவேட் நிறுவனத்தைப் பற்றி யாருக்கும் தெரியாது. ஆனால் இன்றோ, பத்துக்கும் மேற்பட்ட நாடுகளில் தடம் பதித்து, சென்றவிடமெல்லாம் ஜெனோவேட் சிறந்த நிறுவனப் பட்டியலில் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. ஜெனோவேட் நிறுவனத்தை வெற்றிப் பாதையில் வழிநடத்துபவர்தான் திரு ஆண்டன் ரவீந்திரன்.

லதா பாலகிருஷ்ணன்

லதா பாலகிருஷ்ணன்

அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவனங்கள் சிலவற்றில் பணிபுரிந்திருந்தாலும் தமக்கென்று, தன் ஆர்வத்தை, எண்ணத்தை செயல் படுத்தும் வகையில் சொந்தத் தொழில் தொடங்க வேண்டும் என்ற ஆசை மட்டும் திரு ஆண்டன் ரவீந்திரனின் அடிமனதில் கனன்று கொண்டே இருந்தது. அந்த நெருப்புத்தான் இன்று ஆலவிருட்சமாக பல்கி வளர்ந்துகொண்டிருக்கும் நிறுவனத்திற்குச் சொந்தக்காரராக வலம் வரச் செய்திருக்கிறது.

பிற நிறுவனங்களில் பணிபுரியும்போது, அவற்றுக்குரிய எல்லைக்கு உட்பட்டே இயங்க வேண்டியிருந்தது. அந்த எல்லையைத் தாண்ட வேண்டும், எனக்கென்று புதிதாக உருவாக்க வேண்டுமென்ற எண்ணம்தான் ஜெனோவேட் தொடங்க முழு முதற் காரணம் என்றார் ரவீந்திரன். நிறுவனம் பெறும் எந்த வெற்றிக்கும் நிறுவனத்தில் பணியாற்றும் ஒவ்வொரு ஊழியரும் காரணம் என்று பெருமையாகக் கூறும் தன்மை படைத்தவர்.

ஏனெனில், தனித் தன்மை நம்மிடத்தில் இருப்பினும் அதனை சிறப்பான முறையில் சரியான திசையில் செயல் படுத்துவதற்குரிய தொழில்நுட்ப குழுவும் இருந்தால்தான் நினைத்ததை சாதிக்க முடியும் என்று நம்புபவர் இவர்.

எந்தப் புத்தாக்க சிந்தனையும் திறமையான தொழில்நுட்ப நிபுணர்களின் உதவியுடன் சிறப்பாக சந்தைப்படுத்துவதற்குரிய வாய்ப்பு அமையவில்லை என்றால் அது பயனற்றதாகிவிடும். ஆனால் இவை அனைத்தும் ஒருங்கிணைந்து வந்ததும் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு மற்றொரு காரணமாக அமைந்தது எனலாம் என்று தமது வெற்றி ரகசியத்தைப் பகிர்ந்துகொண்டார்.

சிங்கப்பூரில் தொடங்கப்பட்ட நிறுவனம், இப்போது மலேசியா, ஸ்ரீலங்கா, ஆஸ்திரேலியா, இந்தியா, துபாய், இந்தோனீசியா என கிளைபரப்பி வளர்ந்திருக்கிறது. நிறுவனம் தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே சிங்கப்பூருக்கு வெளியில் இந்தியாவின் மும்பையில்தான் முதல் அலுலகத்தை ஜெனோவேட் அமைத்தது.

ஆனால் இந்தியாவின் படு வேகமான பொருளியல் வளர்ச்சியும் வாய்ப்புகள் நிறைந்த பெரிய சந்தையும் ஜெனோவேட்டின் அதிக லாபம் தரும் கிளையாக மும்பை கிளையை உயர்த்தியிருக்கிறது.

இந்தியாவின் குஜராத் மாநில அஹமதாபாத் நகரிலும் போபாலிலும் ஜெனோவேட் இன்னும் ஒரிரு வாரங்களில் செயல்படவிருக்கிறது. மத்திய கிழக்குப் பகுதியையும் இதன் அடுத்த இலக்காக நிர்ணயித்துள்ளது என்றார் ரவீந்திரன்.

லாபமிகுந்தது இந்தியா என்றபோதிலும் தமக்கும் தம் குடும்பத்திற்கும் உகந்த இடமாக ரவீந்திரன் தேர்வு செய்தது எள்ளவோ, சிங்கப்பூரைத்தான். அமெரிக்க கலாசாரத்தில் பழகியிருந்தாலும் தமிழ் பண்பாட்டையும் கலாசாரத்தையும் பெரிதும் நான் மதிக்கிறேன். மேற்கத்திய வாழ்க்கைப் பாணி என்றாலும் மனதால் ஆசியனாக இருக்கும் நான், அதனால்தான் அதே போன்ற சிங்கப்பூரை எனக்குரிய இடமாக தேர்வு செய்தேன் என்றார். பாதுகாப்பு மிக்க சிங்கப்பூர் சூழலும் தொழில்முனைப்புக்கு ஆதரவுக் கரம் நீட்டும் அரசாங்க நடவடிக்கைகளும்தான் ஜெனோவேட்டின் அனைத்துலக சந்தை முயற்சிகளுக்கு ஏற்ற தளமாக சிங்கப்பூரை ஆக்கியிருக்கிறது என்றார்.

தவிர, உலகின் எந்த நாட்டுடனும் ஒப்பிடும்போது எந்தவொரு முயற்சியையும் விரைவாக செய்து முடிக்கக் கூடிய வாய்ப்பும் சிங்கப்பூரில் மட்டுமே உள்ளது என்றும் சிங்கப்பூரைப் பற்றி தனது கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்.

இந்நிறுவனத்தின் ஈசி ஹெல்த், இணையம் வழி நோயாளிகளின் உடல் நிலை குறித்த விவரங்களைச் சுகாதார பராமரிப்பு நிறுவனங்கள் வழி இணைக்கப் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பக் கட்டமைப்பாகும். கல்வித் துறை, சிறிய, நடுத்தர நிறுவனங்களுக்கான சம்பள முறை உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப கணினி மென்பொருள் கட்டமைப்புகளையும் இந்நிறுவனம் வடிவமைத்து வெற்றிகரமாக வழிநடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இந்நிலையை ஒரே இரவிலோ அல்லது சிரமமின்றியோ பெற்றுவிடவில்லை.

சொந்தத் தொழில் தொடங்குவதில் உள்ள அத்தனை சிரமங்களையும் நானும் சந்திக்க வேண்டியிருந்தது. எல்லாரும் எதிர்நோக்கும் பணப் பிரச்சனையுடன் புதிய நிறுவனத்தின் மீது நம்பிக்கையான நிறுவனம் என்ற முத்திரையைப் பதிக்க எடுத்துக் கொண்ட சிரமங்கள்தான் மிக அதிகம். குதிரைப் பந்தயத்தில் புதிதாக ஓடப் போகும் குதிரையின் மீது துணிந்து பணம் கட்டுவது மிக அரிது தானே என்று சிரித்துக் கொண்டே குறிப்பிட்டார் அவர்.

ஜெனோவேட்டின் சிங்கப்பூர் அலுவலகத்தில் சுமார் 130 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். அனைத்து ஊழியர்களும் ஜெனோவேட்டை உலகத் தரத்தில் உயர்த்தும் முனைப்புடன் செயலாற்றிக் கொண்டிருப்பவர்கள் என்பது ரவீந்திரனின் கருத்து. சிறிய நிறுவனத்தில் செய்யும் வேலையை ஆர்வமுடன் செய்பவர்களால்தான் அதனை உணர்த்த முடியும் என்றும் அவர் சொன்னார்.

தொழில்முனைப்பு என்பதும் தொழில் முனைவராவதும் எட்டாத கனியல்ல. புத்தாக்க சிந்தனையுடன் உங்களுக்கென்றே புத்தம் புதிய கனவும் முக்கியம். ஆனால் அது கனவாகவே மட்டும் இருந்துவிடாமல் அதனை செயல்படுத்துவதில் முழு முனைப்புடன் ஈடுபட வேண்டும். அந்த முனைப்பும் அதிகபட்ச தூரத்தைக் கடக்கக் கூடிய அளவிற்கு உறுதியானதாக இருக்க வேண்டும். இடையிடையே வீழ்ந்தாலும் எழுந்து நின்று சவால்களை மீண்டும் எதிர்நோக்கும் மனஉறுதியும் அவசியம்.

Scanned by CamScanner